## இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம்!

# இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக் கூடாது!

### “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை,பிப்.12-

நீண்ட இழுபறிக்குப் பிறகு இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதனால் இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக் கூடாது என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.


தலையங்கம்
தினத்தந்தி
11.2.2026 (புதன்கிழமை)
விவசாயிகளுக்கு பேரிடியான வர்த்தக ஒப்பந்தம்

அது வருமாறு:-

நீண்ட இழுபறிக்குப் பிறகு இந்தியா-அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் முடிவாகியுள்ளது. இதன்படி, இந்திய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட 25 சதவீத பரஸ்பர வரி 18 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால் விதிக்கப்பட்ட 25 சதவீத அபராத வரியும் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு அமெரிக்கா எச்சரிக்கை மணியும் அடித்துள்ளது. இந்தியா இனியும் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்கினால், மீண்டும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் மிரட்டியுள்ளது. இந்த இடைக்கால ஒப்பந்தத்தில் சில சாதகங்களும் இருக்கிறது. அதேசமயத்தில் பாதகங்களும் இருக்கின்றன. இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்தபிறகு இந்தியாவில் இருந்து ரூ.4 லட்சம் கோடி மதிப்பிலான பொருட்கள் வரி இல்லாமல் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது.

அதேபோல அமெரிக்க பொருட்களும் வரியில்லாமல் இறக்குமதி செய்யப்பட உள்ளது. இதில் இந்தியாவுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்பு என்னவென்றால், இதுவரை எந்த நாட்டுக்கும் வேளாண் சந்தையை திறக்க அசைந்து கொடுக்காமல் இருந்த இந்தியா இப்போது முதல்முறையாக அமெரிக்காவுக்கு வேளாண் சந்தையை தாராளமாக திறந்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வேளாண்பொருட்களை இறக்குமதி செய்தால் இந்தியாவில் அதிக செலவு செய்து விவசாயம் செய்யும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அதாவது அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை, வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களோடு விற்பனையில் போட்டிப்போடமுடியாது. இதனால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டது.

இந்திய விவசாய சந்தைக்குள் வெளிநாடுகளால் நுழையமுடியாமல் இருந்தது. ஆனால் இப்போது முதல்முறையாக கையெழுத்தாகும் நிலையில் உள்ள இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தின்மூலம் இந்தியா, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் வேளாண்பொருட்களுக்கு வரி தளர்வு கொடுத்துள்ளதாக இந்திய விவசாயிகள் கொதித்து எழுந்துள்ளனர். இதற்காக நாளை (வியாழக்கிழமை) அவர்கள் போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 3 வேளாண் சட்டங்களை எதிர்த்து பலநாட்களாக டெல்லி எல்லையில் இரவும், பகலும் போராட்டம் நடத்திய பஞ்சாப் விவசாயிகள்தான் இதை எதிர்ப்பதில் மும்முரமாக இருக்கிறார்கள். இப்போதைய ஒப்பந்தத்தின்படி கால்நடைகள் மற்றும் கோழி தீவனங்களை தயாரிக்க முக்கிய பொருளாக விளங்கும் சோளம், சோயாபீன்ஸ், சிவப்பு சோளம் போன்ற பல தானியங்களும் ஆப்பிள், வால்நட், பாதாம் போன்றவற்றையும், பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் வரிகுறைப்புடன் இறக்குமதி செய்வது இந்திய விவசாயிகளுக்கு பெரும் இடியாக விழும் என்று கூறப்படுகிறது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் இமாசலபிரதேச விவசாயிகள் ஆப்பிள் சாகுபடியை நம்பியே தங்கள் வாழ்வாதாரத்தை வகுக்கிறார்கள். இப்போதைய ஒப்பந்தத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை மதிப்பிட்டால் ஆப்பிள் விவசாயமே அதல பாதாளத்துக்கு சென்றுவிடும். இதனால் ஆப்பிள் போல தங்களின் கண்களும் சிவந்துவிட்டதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். இதுமட்டுமல்லாமல் இதுவரை அமெரிக்க வேளாண்பொருட்களுக்கு இந்தியாவில் 30 சதவீதம் முதல் 150 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்ட நிலை மாறி, இப்போது பூஜ்ஜிய வரியாகிவிட்டது. அமெரிக்க விவசாய பொருட்களின் விலை மிக குறைவாக சந்தைக்கு வரும் நிலையில், எங்கள் பொருட்களை அவர்களோடு போட்டியிடமுடியாமல் எங்குபோய் விற்பது? என்று விவசாயிகள் கேட்கிறார்கள். மொத்தத்தில் இந்த ஒப்பந்தம் இந்தியாவின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை கொஞ்சமும் பாதித்துவிடக்கூடாது என்பதை முக்கிய அடிப்படையாக கொள்ளவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; “பொய்யாலும் விளம்பரத்தாலும் உயர்ந்தவர் வாழ்க்கை நிலைக்காது” என்று எடப்பாடி கூறியிருக்கிறாரே, யாரைப் பற்றி ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இப்படி அவர் தனது மனசாட்சியைத் திறந்து கூறியிருப்பது, கண்ணாடி முன் நின்று கொண்டு தனக்குத் தானே! எடப்பாடி பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து, புளுகு ராமாயணம் எழுதிய புரட்டு சேக்கிழார்ப் புலவர் ஆயிற்றே !**

---

## சுற்றுலாத் துறையில் அதிகரித்து வரும்

# விதிமீறல்களை தடுக்க, அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா?

### மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப். 12-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில், சுற்றுலாத்துறை முகமையாளர்களிடம் தொடர்ந்து அதிகரித்து வரும் விதிமீறல்களை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும் சுற்றுலா பயனாளிகளின் இன்னல்களை தடுத்திட ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்முயற்சிகள் உள்ளதா? என்றும் கடந்த ஐந்தாண்டுகளில் சுற்றுலா முகமை யாளர்களின் மீது எவ்வளவு புகார்கள் பெறப்பட்டுள்ளன? என்றும் முகமையாளர்களின் வீதி மீறல்களை தடு;த்து நிறுத்திட ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா? என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களிடம் விரிவான



கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

அதிகமான கட்டணத்தை பெறுதல், சேவைகளில் குறைபாடு, தவறான தகவல்களை அளித்தல் போன்ற, சுற்றுலா முகமையாளர்களுக்கு எதிரான புகார்கள் அனைத்தும் கணினி மூலம் செயல்படும் குறை தீர்க்கும் இணையதளத்தின் மூலம் நிவர்த்தி செய்ய, உரிய முயற்சிகளை ஒன்றிய அரசு எடுத்துள்ளது என்றும், இணையதளம் மூலம் புகார்கள் பெறபட்டதும் சுற்றுலாத்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட முகமையாளர்களிடமும், மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு குறைகளை தீர்க்க ஆவன செய்துள்ளது என்றும், ஒன்றிய அரசு விருந்தோம்பல் முனைவோர்களுக்கும், சுற்றுலா அமைப்பாளர்கள் மற்றும் போக்குவரத்து ஏற்பாட்டாளர்கள் ஆகியோருக்கான வழிகாட்டு நெறிமுறைகளை சுற்றுலாத் துறை வகுத்துள்ளது என்றும், அனுமதி பெற்ற சுற்றுலா முகமையாளர் களுக்கும் மாநில அரசின் உதவியுடன் அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகிறது என்று அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், சுற்றுலா பயனாளிகளின் பாதுகாப்பு, மாநில அரசுகளின் வசம் இருப்பதால் தெலுங்கானா, ஆந்திரபிரதேசம், டெல்லி, கோவா, கர்நாடாகா, கேரளா, மகாராட்டிரா, இமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மத்திய பிரதேசம், ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம் மேலும் உத்திரபிரதேசம் ஆகிய 15 மாநிலங்களுடன் இணைந்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கென சுற்றுலா காவல் துறையை ஏற்படுத்தியுள்ளது என்றும் விருந்தோ ம்பல் முனைவோர்களின் தேசிய தரவுகள் மையம் ஒன்றும் ஒன்றிய அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள் பதிலளித்தார்.

---

## மொத்த உற்பத்தி பெருக்கம் –

# பயனாளிகள் விலைக் குறியீடு நிர்ணயிப்பதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா?

### மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 12-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் மாநிலங்களவையில் ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களான மொத்த உற்பத்தி பெருக்கம், பயனாளிகளின் விலைக் குறியீடு ஆகியவற்றை நிர்ணயிப்பதில் உரிய சீர்திருத்தங்களை அரசு மேற்கொள்ளுமா? என்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் புள்ளி விவரங்கள், அரசின் புள்ளி விவரங்களிலிருந்து மாறுபட்டிருப்பதை அரசு அறியுமா? என்றும் தொழிற்சாலை உற்பத்தி சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? என்றும் சர்வதேசதரத்திற்கு ஏற்ற வகையில் பள்ளியியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள இயலுமா? என்றும், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

ஒப்பந்த விதிமுறைகள் 4ன்படி இந்திய செலாவணி நிதியம், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே, உறுப்பினர் நாடுகளுடன் உறுப்பினர் சந்திப்பு நிகழ்வினை நடத்துகிறது என்றும், உறுப்பினர் நாடுகள் சந்திப்பு கடந்த 2024 வருடம் நடைபெற்றது என்றும், இந்திய செலாவணி நிதியத்தின் அடிப்படை கணக்கீட்டு ஆண்டு 2011-12ல் இருப்பதால் நிதியத்தின் புள்ளி விரங்களுக்கும், இந்திய புள்ளி விவரங்களுக்கும் மாறுபாடு இருப்பது அரசின் கவனத்தில் உள்ளது என்றும், அடிப்படை கணக்கீட்டு ஆண்டினை 2022-23 ஆண்டில் மாற்றியமைப்பதால் புள்ளியியல் சீர்திருத்தத்தை மேற்கொள்ள ஒன்றிய அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்று இணையமைச்சர் மாநிலங்;களவையில் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் மொத்த பெருக்கம், பயணாளிகள் விலைக் குறியீடு, தொழிற்சாலைகளின் உற்பத்தி குறியீடு ஆகியவற்றை நிர்ணயிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்களை தவிர்க்கும் வகையில் தேவையான அனைத்து சீர்திருத்தத் தையும் மேற்கொள்ள ஒன்றிய அரசு உரிய முயற்சிகளை எடுக்கத் திட்டமிடபட்டுள்ளது என்றும், கல்வியாளர்கள். மத்திய மாநில அரசுகள், இந்திய ரிசர்வ் வங்கியாளர் ஆகியோரை உள்ளடக்கிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினர், புள்ளியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளனர் என்றும் வருகின்ற பிப்ரவரி மாத இறுதிக்குள் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்கம், பயனாளிகள் விலைக் குறியீடு ஆகிய புள்ளி விவரங்கள் வெளியிடப்படும் என்றும், இந்திய செலாவணி நிதியத்தின் பல்வேறு காரணிகளை, இந்திய புள்ளியல் துறை கடைப்பிடித்து வருகிறது என்றும் இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்கள் பதில் அளித்துள்ளார்.

---

## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக

# நெல்லையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. அறிக்கை!

நெல்லை .பிப்.12.

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப் பட்டுள்ளதற்கு எதிராக நெல்லையில் இன்று (12. 02.2026 வியாழக்கிழமை) மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாலை 4 மணி அளவில் பாளையங்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

இந்திய ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு நிதி எதுவும் ஒதுக்காமல் புறக்கணிக்கப் பட்டதற்கு எதிராகவும் 100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய



பா.ஜ.க.அரசையும் அதற்கு துணை போகும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (12.02.2026 வியாழக்கிழமை) மாலை 4 மணி அளவில் பாளையங்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெறுகிறது.

ஆகவே ஆர்ப்பாட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டத்தில் உள்ள தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளராக தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள கே.ராஜேஷ் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜைச் சந்தித்து வாழ்த்து பெற்றார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.


---

## 100 நாள் வேலை ரத்து – நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த

## பாசிச பா.ஜ.க. அரசையும்– அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இன்று மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் 6 தொகுதிகளில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



100 நாள் வேலை ரத்து - விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க ஒப்பந்தம் - ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்த பாசிச பா.ஜ.க. அரசையும் - அடிமை அ.தி.மு.க. வையும் கண்டித்து இன்று (12.2..2026 - வியாழக்கிழமை) மாலை 4 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

| வ.எண். | சட்டமன்றத் தொகுதி | ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | ஆலந்தூர் | மண்டித் தெரு, ஆலந்தூர் |
| 2. | திருப்பெரும்புதூர் | பஜார் வீதி, சுங்குவார்சத்திரம் |
| 3. | பல்லாவரம் | பேருந்து நிலையம், பல்லாவரம் |
| 4. | தாம்பரம் | சண்முகம் சாலை, தாம்பரம் |
| 5. | செங்கல்பட்டு | பழைய பேருந்து நிலையம், செங்கல்பட்டு |
| 6. | திருப்போரூர் | பேருந்து நிலையம், திருக்கழுக்குன்றம் |

எனவே அந்தந்த மாநகர - ஒன்றிய - நகர பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் இணைந்து இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த தொகுதியில் அடங்கிய மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம் பெற்றுள்ள கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட வட்டார - ஒன்றிய - நகர - பேரூர் தலைவர்களை முறையாக அழைப்பு விடுத்து அவர்கள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கச் செய்திட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.